36 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

“ சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே ”


வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ACC-NO-10813

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 22-4-33

மதிற் பூனைகள் மகாநாடு



—*Courtesy of “Hindustan Times”*

கல்கத்தாவில் நடந்த மிதவாதிகள் மகாநாட்டை ‘மதிற் பூனைகளின் கூட்டம்’ என்று ஒருவர் வர்ணித்தார். சர்க்கார் கக்ஷியில் குதிப்பதா, தேசீயக் கட்சியில் குதிப்பதா வென்று, சதா குறி கேட்டுக் கொண்டு குந்திக் கிடக்கும் இந்தப் பூனைகளுக்கு சுய அறிவே இல்லை போலும்! இந்த நெருக்கடியான சமயத்தில் இவை சர்க்கார் தரப்பில் குதிக்குமானால், அதோடு இவைகளின் இராஜீய வாழ்க்கைக்கும் தேச மக்கள் முடிவு கட்டி விடுவோர்கள்.

தேசத் துரோகம்

மிதவாதிகளின் நாக்குகளில் ஜலம் ஊறி விட்டது. “என்ன குறைகளிருந்தாலும் புதிய சீர்திருத்தங்களை நாங்கள் ஏற்று நடத்தப் போகிறோம்” என்று வலங்கிமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரி கல்கத்தாவில் கூறி விட்டார். தேசத்தின் முன்னேற்றத்தைப் பல தடவை கெடுத்தவர்கள் மிதவாதிகள். தேசத்தின் பாவத்தையும், சாபத்தையும், பல தடவை கட்டிக்கொண்டவர்கள் இந்த மிதவாதிகள். அதே மாதிரி இந்த சமயத்திலும் தேசத்தைக் காட்டிக் கொடுக்க சில மிதவாதிகள் தீர்மானித்து விட்டதாகவே எண்ண நேரிடுகிறது. இனிமேல் இவர்களை ‘மிதவாதிகள்’ என்று அழைப்பதா? ‘தேசத் துரோகிகள்’ என்று அழைப்பதா?

கல்கத்தாவில் மிதவாதிகள் பேசிய பேச்சைக் கேட்டு சீமையிலுள்ள மாஞ்செஸ்டர் கார்டியன் பத்திரிகை ஒரு குறிப்பு எழுதி யிருக்கிறது. “புதிய அரசியல் திட்டத்தை சர்ச்சில் கோஷ்டி தாக்கத் தாக்க, இந்திய மிதவாதிகளுக்கு அத்திட்டத்தின் மீது ஏதோ மோகம் ஏற்பட்டு வருகிறது. அத் திட்டத்தில் ஏதாவது நல்லது இருக்கும் என மிதவாதிகள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.” இந்திய மிதவாதிகளுக்கு இப்போது மாஞ்செஸ்டர் கார்டியன் பத்திரிகை கூட ‘முட்டாள் பட்டம்’ கட்டத் தலைப்பட்டு விட்டது.

சர்ச்சில் கூச்சல் போடுவ தெல்லாம் ஒரு நாடகம். வெள்ளைக் கடுதாசியைத் தந்த ஸாமுயேல் ஹோரைக் கண்டிப்பது போல் சர்ச்சில் பாசாங்கு செய்கின்றான். நோக்க மென்னவென்றால் வெள்ளைக் கடுதாசிக்கு இந்திய மிதவாதிகளை தாஸர்களாக்கி விடலா மென்றுதான்! இப்போது மிதவாதிகள் இந்த நாடகத்தில் ஏமாந்து போய் சர்க்காருக்கு ‘பிடில்’ வாசிப்பார்களானால் போச்சுது இந்தியாவின் மானம்! ஒழிந்தது ஒற்றுமை! தேசத்தைக் காட்டிக் கொடுத்த இந்தக் கூட்டத்தை தேச மக்கள் எளிதில் விடமாட்டார்களென்பதை எச்சரிக்கை செய்கிறோம்.

மகாத்மா காந்தியையும், பல்லாயிரக் கணக்கான தேச பக்தர்களையும் சிறையில் வைத்து விட்டு இந்தத் தேசத்தின் தலை யெழுத்தைப் பற்றிப் பேசுவதற்கு யாருக்கு உரிமை உண்டு? காங்கிரஸ் மகா சபையின் உதவி யின்றி இந்த நாட்டில் எவர் பாச்சாவும் பலியாது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

கவுன்ஸில் பித்தர்களுக்கு—

புதிய அரசியல் திட்டம் எப்படி யிருக்குமென்பது நிச்சயமாகவில்லை. இன்னும் கர்ப்பப் பைக்குள்ளேயே அது இருக்கின்றது. இது குறையிலேயே செத்துப் போகுமோ, அல்லது அடியோடு மாற்றமடைந்து பிறக்குமோ யார் கண்டது? ஆகவே திட்டமென்ன தென்று அறிவதற்கு முன்னமே சட்ட சபைப் பிரவேசத்தை எண்ணிச் சிலரின் தலைகள் சுழல்வானேன்?

க்வுன்ஸில் வேலை இல்லா விட்டால் தண்ணீரை விட்டு தத்தளிக்கும் மீன்கள் போன்று தவிக்கும் மனிதர்கள் உண்டு. அவர்களுக்காக நாம் பரிதாபப் படுகிறோம். ஆனால் தேச நன்மையை உத்தேசித்து அவர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டு மென்று கோருகிறோம். கோழி பிறக்குமா, பிறக்காதா யென்பதே சந்தேகம். அந்தக் கோழி பிறந்து பெரிதாகி முட்டை யிடுமா இடாதா வென்பதும் சந்தேகம். அப்படியே முட்டை யிட்டாலும் குஞ்சு பொறிக்குமா பொறிக்காதா வென்பதும் ஐயமே! இப்பேர்ப்பட்ட ஓர் அரசியல் திட்ட விஷயத்தில் கவுன்ஸில் பித்தர்கள் ஆத்திரமடைந்து அலைவானேன்?

தேசம் முழுவதும் வெள்ளைக் கடுதாசியை எதிர்த்துக் கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் இந்தத் திட்டத்தின் சுப்ரதிவ்யமான அழகைப்பற்றி எவனாவது வர்ணித்தால் அவனை என்னென்பது? திட்டத்தைக் கண்டனம் செய்வதெல்லாம் வெறும் ‘ஹம்பக்’ பேச்சு என்று எதிரிகள் என்னுவார்களன்றோ!

பொறுத்துக் காரியம் செய்வது தான் புத்திசாலிகளுக்கு அழகு. இதுவரையில் பார்த்ததில் சர்க்காருடைய புதிய அரசியல் திட்டம் அடியோடு நம்மை பாழ் செய்து விடு மென்பது தெரிகிறது. அந்நியர் தம் அதிகாரத்தை வலுப்படுத்துவதோடு, பிடியை இன்னும் இறுக்குவதற்கும், நம்மை அடிமைகளாக்குவதற்கும் அநுகூலமாகவே இந்த திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். ஆகவே இதைக் கண்டு ஆசைப்படுவாரு முண்டா? கவுன்ஸில் பித்தர்களே பொறுமை கொள்ளுங்கள்! தயவு செய்து பொறுமையோ டிருங்கள்!

—ஸர்ச்லைட்.

மகா தியாகம்

(தபாற்கூலி யுள்பட 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.)

சிதம்பர பாகவதர் கதை

நார்த்தங்காய் ஊறுகாய், ஏணி, தோணி முதலியவைகளைப் போன்றவர் கதை சொல்லும் பாகவதர் என்று சொல்வதுண்டு. எல்லாவற்றையும் ஜீரணிக்கச் செய்துவிட்டு தான் மட்டும் ஏப்பம் எழுப்பிக் கொண்டேயிருப்பது நார்த்தாங்காய் ஊறுகாய். ஏணியும், தோணியும் பிறரை ஏற்றி விடுமே யன்றி தாம் ஏறவே ஏறாது. அதே மாதிரி ஹரிகதா காலக்ஷேபம் செய்யும் பாகவதர்களும் பக்தி யென்றும், முக்தி யென்றும் 'பாமரர்'கட்கு உபதேசித்து அவர்களை யெல்லாம் கடைத்தேற்றுவர். ஆனால் தாங்கள் மட்டும் கடைத்தேற மாட்டார்களாம். ஏனெனில் பக்தி யென்று வாயினால் உபதேசிப்பார்களே யன்றி தங்கள் மனதில் அதை ஒட்டுவதற்கு விட மாட்டார்களாம். வாழ்க்கையில் பக்தியை ஒட்டிக் கொண்டால் அவர்களின் பணப்பை நிரம்புமா?

எல்லாப் பாகவதர்கள் விஷயத்திலும் இந்தக் கற்பனையைப் பொருத்த முடியுமென்று நாம் சொல்ல முடியாது. ஆனால் சில பேர்களுக்கு இக் கற்பனை முற்றிலும் பொருத்தமாகவே யிருக்கிறது. சபையோர் வற்புறுத்துகிறார்களே யென்ற காரணத்தால், "ராட்டினமே காந்தி கைப் பாணம்" என்று தேசியப் பாட்டை சில பாகவதர்கள் பாடுகின்றனர். அந்தப் பாகவதர் உடலிலோ துளி கதர் கூட இருப்பதில்லை. ஆனால் தேசத்துக்கு வாசா கைங்கரியமாவது செய்கின்றார்களே யென்று பொது ஜனங்கள் மன்னித்து வருகின்றனர்.

ஆனால் தேச மக்களின் காசை வாங்கித் தின்று கொண்டு, தேசத்துக்கு இடையூறான கருத்துக்களையும், விரோதமான எண்ணங்களையும் எந்த பாகவதராவது வெளியிட்டுக் கொண்டிருந்தால் அந்த 'மகானை' என்னென்பது? பணக் கஷ்டம் நிறைந்த இக் காலத்தில், ஒவ்வொரு தம்பிடிக்கும் மதிப்புள்ள இக் காலத்தில், கதா காலட்சேபம் செய்ய வரும் மனிதனைத் தேர்ந்து எடுத்தே கதை சொல்லச் செய்ய வேண்டும். ரொம்பப் படித்தவனாயினுமென்ன? சங்கீதக் கலையில் தேர்ந்தவனாயிருந்தா லென்ன? தேசத்ரோகமான ஆலோசனைகளைச் சொல்பவர்,

"பன்னருங் கல்வி கேள்வி
படைத்துயர்ந் திட்டாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள் வேய் பிணத்தோ டொப்பார்"

இந்த வரிகளை எவ்வளவு ஆத்திரத்தோடு பாரதியார் பாடிச் சென்றிருக்கிறார் பாருங்கள்!

திருவையாற்றினின்று ஒரு செய்தி கிடைத்துளது. 'மாங்குடி சிதம்பர பாகவதர்' என்று தமிழ் நாட்டில் பிரும்மாண்ட பாகவதர் ஒருவர் உண்டு. அந்தப் பேர்வழி திருவையாற்றில் ருக்மணி கல்யாணம் கதை சொன்னாராம். கதையில் காந்தியடிகளைப் பற்றித் தாறுமாறாகப் பேசினாராம். காங்கிரஸ் தொண்டர்களனைவரும் காலிப் பயல்களென்று வருணித்தாராம். சோற்றுக்கு வழியற்ற பயல்களென்றும் வருணித்தாராம். இந்த மாதிரி இந்த அசந்தர்ப்பப் பேர்வழி உளறி யிருந்தால் அவரிடம் இனி தமிழ் நாடு ஜாக்கிரதையா யிருக்க வேண்டியதுதான். "பாகவதரே! கடையைக் கட்டும்" என்று சொல்ல வேண்டியதுதான்.

தேசத்துக்காகத் தியாகம் செய்ய முற்பட்டவர்களைத் தூஷிக்க, கூலி பெறும் ஒரு பேச்சுக்காரர் முற்படுவதா? இந்தச் சிதம்பர பாகவதருக்கு காங்கிரஸ் மீதும், காந்தியடிகள் மீதும் போர் புரியவேண்டு மென்ற ஆசையிருக்குமானால் இவர் ராஜீய மேடைக்கு பகிரங்கமாக வரட்டும். குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுவது போல காலக்ஷேபக் கொட்டகைகளில் இவர் கை வரிசை காட்ட வேண்டியதில்லை.

காலக்ஷேபம், நாடகம், சங்கீதம் முதலிய எல்லாத் துறைகளிலும் தேசியம் கமழ வேண்டுமென்பது பொது ஜனங்களின் ஆசை. 'நேஷனல் ஆந்தம்' பாடப்படும் போது ஒவ்வொரு ஆங்கிலேயனும் எழுந்து தலை வணக்கம் செய்வான். 'எரின் கோ பிரா' என்ற பாட்டை அயர்லாந்தில் பாடாவிட்டால், அந்த சங்கீத வித்வானை அங்கு படாதபாடு படுத்தி விடுவார்கள். ஒவ்வொரு நாட்டினரும் தேசியப் பாட்டுக்கு காட்டும் மதிப்பு இன்னும் நம் நாட்டினருக்கு ஏற்படாதது நமது துர்ப்பாக்கியமே! அதற்கு பொது ஜனங்களின் அறிவு வளர்ச்சியுறாதது ஓர் காரணமாயினும், சிதம்பர பாகவதர் போன்ற அதிகப் பிரசங்கிகள்தான் முக்கிய காரண மாவர். இவர்கள் என்றைக்கு கடைத்தேறுவார்களோ?

ரோமேன் ரோலண்டு எழுதிய
மகாத்மா காந்தி
தபாற் கூலி உள்பட 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்
சுதந்திரச் சங்கு காரியாலயம்

"விலங்கை எனக்கு மாட்டு"

கவி திலகர் தாகூரின் கீதாஞ்சலி என்னும் உயர்ந்த நூலில், ஒரு அழகிய சிறு சித்திரம் இருக்கிறது. ஒரு கைதி இரும்புக் கூண்டுக்குள் விலங்கு மாட்டியவனாக நிற்கிறான். "கைதியே! உன்னை யார் இந்தச் சிறையிலடைத்தது? யார் உனக்கு விலங்கு மாட்டியது?" என்ற கேள்விக்குக் கைதி பதில் சொல்லுகிறான்: "என்னுடைய பேராசையே இந்தச் சிறையாக முடிந்தது. உலகத்தையெல்லாம் ஜெயித்து, இந்தச் சங்கிலியால் கட்டிப் போடலாமென்று, இதை அல்லும் பகலுமாய்த் தயார் செய்தேன். முடிந்ததும் கைகளில் கட்டி அளவு பார்த்தேன். இப்போது கையை விட்டுப் போகாமல் இது என்னையே தனித்துக் கொண்டிருக்கிறது." இது தான் கைதியின் பிரலாபம்.

நமது நாட்டிலும், வகுப்பு வாதிகளும், சமூக வாதிகளும் பலர் இந்த சாபத்திற்கு ஆளா யிருக்கிறார்கள். பிரிட்டிஷ் ராஜ தந்திரியைப் போன்ற, மாய வேட்டைக்காரன் உலகத்தில் வேறெங்கும் கிடையாதென்று கூறலாம். "சிறு பாலர் பாதுகாப்பு", "பெரும்பாலர் பாதுகாப்பு" "அமைதிப் பாதுகாப்பு" "பொருள் பாதுகாப்பு" "தற்காப்புப் பாதுகாப்பு" என்று சில புரளிகளைக் கிளப்பி விட்டான் பிரிட்டிஷ் ராஜதந்திரி. இந்தப் பாதுகாப்புகளெல்லாம் உண்மையில் எப்படிப்பட்டவை? எல்லாம் கடுமையான விலங்குகளே யாகும்; எல்லோர் பிண்டுகளையும் கைப்பற்றிக் கொள்ளும் மாய வலைகளே யாகும்.

ஆனால், இந்த மாயப் புரளியை அவன் கிளப்பி விட்டானோ, இல்லையோ, இந்திய வகுப்பு வாதிகள், முதலாளிகள் ஆகியவரெல்லாம், "எனக்கு மாட்டு அந்த விலங்கை" என்று கூக்குரல் போடத் துவங்கி விட்டனர். இப்பொழுது, பிஹார் ஜமீன்தார்கள் தங்களுடைய சவுகர்யத்துக்கான சில 'பாதுகாப்பு'களைத் தர வேண்டுமென்று கூக்குரல் போடுகிறார்களாம்!

எல்லார் தலை மயிரையும் "பாதுகாப்பு" வலைக்குள் சேர்த்து முடித்து, வைஸ்ராய் விசேஷ அதிகாரம், கவர்னர் விசேஷ அதிகாரம் என்ற கயிறுகளால் கட்டிப் பிடித்து இழுத்துக்கொண்டிருக்க ஜான்புல் முயலுகிறான். இதை யறியாமல் "நான் முந்தி, நீ முந்தி" என்று விழுந்தடித்துக் கொண்டு சில ஜன்மங்கள் தலையை நீட்டுகின்றன. ஐயோ! பாவமே!

மந்திரி ராஜா சரடு

நமது அரசியல் வாதிகளிடம் உள்ள ஒரு பெரிய துர்க்குணம் என்னவென்றால், எதையும் அதி தீவிரமாகப் பேசி விடுவார்கள்; ஆனால், நடவடிக்கைக்கு மட்டில் வராது. "நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி, வஞ்சனை சொல்வாரடி, கிளியே— வாய்ப் பேச்சில் வீரரடி!" என்று நமது புதுமைக் கவி பாரதியார், இதை எண்ணியே கூறினார்.

இப்பொழுது நமது மாகாணத்துக்கு முதன் மந்திரியா யிருக்கிறாரே பொப்பிலி ராஜா, அவர் சமீபத்தில் ஓர் மகாநாட்டில் சரடு விட்டிருக்கிறார். வெறும் சரட்டினால் என்ன பயன் என்பதை அவர் அறிவாரோ?

அவர் கூறுவதாவது :—"நூற்பதையும் நெசவையும் புத்துயிர் பெறச் செய்ய வேண்டும். அதனால், கிராமவாசியின் குடும்பச் செலவு குறையும். அது மாத்திர மல்ல. அந்நிய சாமான்களை வாங்கி உபயோகிப்பதில் ஏற்படும் செலவும் குறையும். உடம்புக்கு எலும்புக் கூண்டு எவ்வளவு முக்கியமா யிருக்கிறதோ அதைப் போலத்தான், ஜன சமூகத்துக்கு குடிசைத் தொழில்கள் முக்கியமா யிருக்கின்றன. இந்தக் குடிசைத் தொழில்களுக்கு, அதிகமாக முதல் போட வேண்டியதில்லை. ஆகவே குடிசைத் தொழில்களை நாடெங்கும் நிலைப் படுத்தி விட வேண்டும்."

ஐயா ராஜாவே, மந்திரியே! நல்லாய்த்தான் பேசி யிருக்கிறீர்கள். ஆனால்—? தாங்கள் தங்கள் ராஜாங்கத்தின் ராஜ காரியங்களையெல்லாம் விட்டு விட்டு, மாகாணத்துக்கே விமோசனம் தேட முதன் மந்திரி ஸ்தானம் ஏற்றிருக்கிறீர்களே; உங்களுக்குத் துணையாக அபிவிர்த்தி மந்திரி யொருவர் இருக்கிறாரே இருவரும் சேர்ந்து, கதர் நூலுக்கும், நெசவுக்கும் எப்போது உதவப் போகிறீர்கள்? வெறும் வாய் உபதேசம் செய்வதற்கு நீங்கள் தேவை யில்லை; இந்த விஷயங்களில் உங்களை விடத் தேர்ந்தவரும் அதிக செல்வாக்குடையவருமான தலைவர்கள் பலர், ஜனங்களுக்குப் போதித்துக் கொண்டும், இயன்ற வரை தொண்டு புரிந்து கொண்டும் தானிருக்கிறார்கள். வெறும் வாய்ப் பேச்சும், தித்திக்கும் பிரசங்கமும் இனி எடுபட மாட்டா என்பதை அறியுங்கள். பேச்சைக் காரியாம்சத்தில் காட்டுங்கள்!

பிணங்கள் நடக்குமா?

(சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார்)

"நாய்களையும் கட்டிப் போடத் தகுதியற்றதான குடிசைகளில் ஆயிரக் கணக்கான மனிதர்கள் வசித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு நல்ல வீடு கட்டிக் கொடுப்பாரைக் காணோம். ஆனால் அரசாங்கம் மட்டும், புதிது புதிதாக கோர்ட்டுக் கட்டிடங்களை மாளிகை தோரணையில் கட்டிக் கொள்கிறது. இந்த அநியாயத்தை பொது ஜனங்கள் எவ்வளவு நாளைக்கு சகிப்பார்கள்?" என்று பாரிக் ஹார் என்ற அறிஞர் எழுதிச் சென்றார். அவருக்கு ஏற்பட்ட எண்ணங்களைப் போல, புதிய டெல்லியில் தெருத் தெருவாக அலைந்து கொண்டிருக்கும் ஷோக்கு இளைஞர்களின் மனதில் கொஞ்சமாவது எண்ணங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா? இந்திய துரைத்தனத்தை நடத்துவதற்காக என்ன கட்டிடங்கள்! என்ன மாளிகைகள்! இவ்வளவு வேண்டுமா?

உத்தியோக வேட்டையே பெரு நோக்கமாகப் போய் விட்ட படியால் இதர பிரச்னைகளைப் பற்றி யோசிக்கவும் இளைஞர்களுக்கு நேரமில்லை போலும்! இந்தியாவை ஆள்வதற்காகவும், பகைகளினின்று காப்பதற்காகவும், ஒரு இளைஞர் கூட்டத்தை இந்தியா மந்திரி நியமனம் செய்கின்றார். அந்த இளைஞர்களோ உத்யோகம், சம்பளம், படி, மேலும் மேலும் பதவி வேட்டை இவைகளிலேயே கண்ணும் கருத்துமாக இருக்க முயல்கின்றனர். தேவலோகத்தில் பிறக்காது போனோமே என்று நினைத்துக் கொண்டு ஸதா கேளி லோலராக இந்த இளைஞர் கூட்டம் இருக்கின்றது.

என்ன மோசம்! என்ன வஞ்சகம்! அரை வயிற்றுக்கு மின்றி அவதிப் படும் இந்தியக் குடியானவரிட மிருந்து வாங்கிய வரிப் பணத்தைக் கொண்டு இவ்வளவு தடபுடல் செலவில் ராஜாங்கம் நடத்துவதா? இந்தியக் குடியானவனோ நாளுக்கு நாள் க்ஷீணித்துக் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் புதிய புதிய செலவுகளை அவன் வரிப் பணத்தில் செய்யலாமா? ஏழைக் குடியானவனைக் கைதூக்கி விடும் நோக்கத்தோடு 'நிபுணர் கமிட்டி' ஒன்று நியமிக்கப் படுகிறது. அந்தப் 'பரோபகார' கமிட்டிக்கு என்ன படிச் செலவு! என்ன கொழுத்த சம்பளம்! இதைப் பார்த்தால், "ஐயா போதுமையா நீங்கள் என்னைக் கைதூக்கி விட்டது!" என்று குடியானவன் முறை யிடுவானன்றோ!

"சிறை புகுவதே வழி"

சிந்து பிரதேசத்தில் உள்ள ஹைதராபாத் என்ற ஊரில் பி. எல். பிள்ளை என்பவர் ஒரு வியாபாரி. அவர் காங்கிரஸ் இயக்கத்தாருக்கு உதவுகிறாரென்று சம்சயித்து அவருக்கு கமிஷனர் ஒரு உத்தரவு போட்டார். அந்த உத்தரவுக்கு ஸ்ரீயுத பி. எல். பிள்ளை அடியிற் கண்ட பதிலை கமிஷனருக்கு எழுதி யிருக்கிறாராம்:—

"நான் 24 மணி நேரத்தில் இந் நகரை விட்டுப் போய் விட வேண்டு மென்றும் ஏப்ரல் 17-ம் தேதி யன்று சென்னைக்குப் போய் போலீஸ் கமிஷனரிடம் ஆஜராக வேண்டு மென்றும், பிறகு சென்னையிலேயே வசிக்க வேண்டு மென்றும் உங்கள் உத்தரவில் கட்டளை யிட்டிருக்கிறீர்கள். எனக்குச் சென்னையில் தங்குவதற்கு வீடோ, வியாபாரமோ கிடையாது. மேலும், நான் சென்னையைச் சேர்ந்தவனு மல்ல. நான் 1927-ம் வருஷத்திலேயே தென்னிந்தியாவை விட்டு விட்டு இங்கு வந்து வியாபாரம் நடத்தி வருகின்றேன். சென்ற வருடத்தில் நான் சத்தியாக்ரக இயக்கத்தில் ஈடுபட்டு தண்டனை யடைந்து, இந்த ஏப்ரல் முதல் தேதிதான் விடுதலை யடைந்தேன். மீண்டும் நான் ஜெயிலுக்குப் போகுமாறு நீங்கள் தான் கட்டாயப் படுத்துகிறீர்கள். ஆகவே வேறு வழி யில்லை. உங்கள் உத்தரவை மீறி ஜெயிலை அடைய வேண்டியதுதான் வழி!"

புதிய அரசாங்கம் என்ற மோட்டாரில் தடைகள், பிரேக்குகள் எல்லாம் நிறைந்திருக்கின்றன. எலெக்ஷன் முதலியவைகளை தாராளமாக அனுக்ரகித்திருக்கின்றனர்.

"ஹே இந்தியனே! இந்த மூட்டையையும் தோள் மேலே ஏற்றிக் கொள்! சேர வேண்டிய ஊருக்குச் சீக்கிரம் போய்ச் சேருவாய், சுதந்திர மடைவாய்" என்று தேவி பிரிட்டானியா இந்தியனிடம் சொல்கின்றாள்.

"அம்மா, அம்மா! வேண்டாமம்மா! நான் தூக்குகிற சுமை போதாதா? இன்னும் சுமை வேண்டுமா? இந்த மூட்டையையும் தூக்கிக் கொண்டு நடப்பேனானால், நடு வழியில் என் முதுகு முறிந்து போகும்! நான் வழியிலேயே செத்துப் போனால் பிறகு சேர வேண்டிய ஊரை நோக்கி என் பிணம் எப்படி நடந்து செல்லும்?" என்று குடியானவன் கேட்கின்றான்.

"நாழி யரிசிக்கே நாம்"

"சேவித்தும் சென்றிரந்தும்
தெண்ணீர்க் கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும்
பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழினுடம்பை
வயிற்றின் கொடுமையால்
நாழியரிசிக்கே நாம்."

என்று ஔவை பாடினாள். இந்த எண் சாண் உடம்பைக் காப்பதற்காக மனிதன் எத்தனை ஜகஜ்ஜாலங்கள் செய்கிறான்! எத்தனை மோசடிகள் செய்கிறான்!

சென்னை 'அடிசன்' கம்பெனியில் சித்திர வேலை செய்து வந்த மகாதேவ முதலி என்பான் 1931ஆம் வருஷத்தில் வேலையினின்று விலகினான். "கீழ் நாட்டில் உள்ள என்கிரேவர் யாவரினும் சிறந்தவன்" என்று கம்பெனிக்காரர்கள் அவனுக்கு சர்டிபிகேட் கொடுத்தார்களாம். வேலையை யிழந்த மகாதேவன் தனது கைத் திறமையை உபயோகித்து 'நாழியரிசி' சம்பாதிக்கலாகாதா? கள்ள நோட்டு நாணயங்கள் தயாரிக்கும் சித்திர அச்சுக்களை அவன் தயாரிக்கத் தலைப்பட்டான். கண்டு பிடிக்கப் பட்டான். 5 வருடக்காவல் தண்டனை யடைந்தான்.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் வலுத்திருப்பதால் வேலையில் வன்மை மிகுந்தவர்கள் கூட அயோக்கியத் தனமாகப் பொருள் தேட ஆரம்பித்து விடுகின்றனர். 'பணம், பணம்' என்று பணப் பித்துக்கொண்டு குதிரைப் பந்தயங்களிலும், போட்டிப் பந்தயங்களிலும், லாட்டரிகளிலும் கைக் காசையும் இழந்து தவிக்கின்றனர். 'நாழி அரிசி' கூடக் கிடைக்காமல் அவதிப் படுபவரும் உண்டு. நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு அரசாங்கமும், பொது ஜனங்களும், முதலாளிகளும் உடனே முற்படவேண்டும். இல்லாவிடின் இந்திய சமூகம் அடியோடு கெட்டுப் போய் விடுவதோடு மகத்தான புரட்சிக்கும் அடிப்படையாகும்.

நாஸ்திகம் வலுத்ததற்கும் 'நாழியரிசி' கிடைக்காததே காரணம். உதாரணமாக அன்று தெருவில் பண்டாரம் என்ன பாடிக்கொண்டு போனான் தெரியுமா?

"உள்ளே தெய்வம் கல்லு!
உலாவும் தெய்வம் காசு!
பேசும் தெய்வம் நானு!
பெரிய தெய்வம் சோறே!"

சிறைக் கொடுமை

நமது நாட்டில் போலச் சிறைகள் அவ்வளவு கொடுமையாக வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இங்கு, அரசியல் கைதிகளையும் பிற கைதிகளையும் ஒரே இனமாகச் சேர்ப்பது பெருங் கொடுமை யாகும். அநேக நாடுகளில், திருட்டு, கொலை, மோசம் முதலியவற்றைக் கூட, மனிதனைப் பீடித்த ஓர் மன நோய் என்று கருதி, அந்தக் குற்றவாளிகளையும் திருத்தும் முறையில் சிறைகளை நடத்தி வருகிறார்கள். இங்கேயோ, அரசியல் கைதிகளுள்பட சகல குற்ற வாளிகளையும், ஜன சமூகத்தின் விரோதிகள் எனக் கருதி, அவர்களைப் பழி வாங்கும் தோரணையிலேயே நடத்துகின்றனர்.

சிறைகள் மிக நல்ல முறையில் நடத்தப் படுவதற்கு ருஷ்யாவை உதாரணமாகக் கூறலாம். சமீபத்தில் பிரிட்டிஷ் எஞ்சினீயர்கள் அங்கு கைதியாகி விசாரிக்கப் பட்டார்களல்லவா? எதிரிகள் விசாரணை காலத்தில் சிறையில் மிகக் கண்ணியமாக நடத்தப்பட்டார்களாம். அருமையான சாப்பாடு போடப்பட்டதாம். நமது நாட்டிலோ, ஒருவன் தண்டிக்கப்படுமுன் விசாரணைக் கைதியாயிருக்கும் பொழுதே, மயிரும் கல்லும் நிறைந்த களியும் கூழும் உருண்டைக் கட்டியும் வந்து விடுகின்றன.

ருஷ்யாவில், சிறையில் உள்ள கைதிகளுக்கு வருஷத்துக் கொருமுறை, 15-நாள் வீடு சென்று வர லீவு கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்தக் காலத்தில் அவர்கள் போலீஸில் ஆஜர்க் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். இங்கோ, நீண்ட காலக் கைதியானால் வீட்டையும் வாசலையும் மறந்து, உருமாறி, அந்நியனாகி, திக்கற்றவனாகி விடுமாறு செய்யப்படுகிறது. ஆளுவதே பெரிதென்றெண்ணாது பொறுப்புடன் நடக்கும் சுயராஜ்யம் வந்தாலல்லவா, இக் கொடுமையெல்லாம் தீர்ந்து, மனிதனை மனிதனாய் நடத்தும் காலம் வரும்!

மகாத்மா காந்தி எழுதிய

சத்திய சோதனை 1-ம் பாகம்	ரூ.	1½
சத்திய சோதனை 2-ம் பாகம்	ரூ.	2
இல்லறமும் பிரும்மசரியமும்	அணா	6
அனாஸக்தி யோகம் (பகவத்கீதை)	,,	4
ஆரோக்கிய வழி	,,	4
நீதி தர்மம்	,,	2

'நான் சுதேசிப் பித்தன்'

"எனது சாப்பாட்டுக்காக நான் தம்பிடி கூடச் செலவழிப்பதில்லை. ஆனால் பணம் மிருந்த சர்க்காராலும், ஊதாரித் தனம் மிருந்த சில நண்பர்களாலும் எனது சோற்றுச் செலவு கவனிக்கப்பட்டு வருகிறது. எனது சரீரத்திற்கு ஆட்டுப் பாலும், பழமும் அவசியமான தேவை யாயிருந்து வருகிறது. நான் பெரிதும் சுதேசி மோகம் பிடித்தவன்; இந்தியாவில் கிடைக்காத சாமான்களுக்கு மட்டும் நான் வேறு நாட்டைத் தேடுவேன். அரேபியா, ஆப்கனிஸ்தானம் முதலிய இடங்களினின்று வரும் பேரீச்சம் பழத்தை நான் உபயோகித்து வருகிறேன். நான் உபயோகிக்கும் அந்நிய நாட்டுச் சாமான் களில் இதுவொன்று. காஷ்மீரத்திலிருந்து சில சமயங்களில் பேரீச்சை கிடைப்பது முண்டு. ஆலைகளில் தயாராகும் துணிகளை ஒதுக்கிவிட்டு ஹரிஜன சகோதரர்களால் தயாரிக்கப்படும் கதர்த் துணிக்கே நான் சலுகை காட்டுகிறேன். ஆகவே சுத்த சுதேசி விரதமுடையவன் என நான் பெருமை பாராட்டிக் கொள்கிறேன்" என்று காந்திஜி ஸ்ரீயுத பதக் என்பாருக்கு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறார்.

மகாநாட்டு மோகம்

மாக்டனால்டு துரை முதன் மந்திரியாக வந்தாலும் வந்தார் — அவர் வந்த நாள் முதல் மகாநாடு, மகாநாடு — உலகெங்கும் மகாநாடுகள் நடந்த வண்ணம் இருந்து வருகின்றன. ஆயுதப் பரிகரண மகாநாடுகள், ஒட்டாவா மகாநாடு, இந்திய வட்டமேஜை மகாநாடுகள், பர்மா வட்டமேஜை மகாநாடு, உலக சமாதான மகாநாடு, கிழக்கே மகாநாடு, மேற்கே மகாநாடு, இப்படியாக மகாநாட்டுப் பித்தம் பிடித்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தவிக்கின்றது.

இத்தனை மகாநாடுகள் போதாதென்று சமீபத்தில் 'டாரண்டோ' என்ற விடத்தில் ஏகாதிபத்திய மகாநாடொன்று நடக்கப் போகின்றதாம். அதில் ஏகாதிபத்திய செய்திப்போக்குவரத்து போன்ற சில்லரை விஷயங்களைப் பற்றிக் கடமையாக விவாதம் நடத்தித் தீர்மானிக்கப் போகிறார்களாம். சர்க்கார் ஸ்வீகார புத்திரர்களான ராமசாமி முதலியார், ஐயகர் முதலியோர் இந்தியப் பிரதிநிதிகளாக அங்கு செல்வார்களாம். அட மகாநாட்டுப் பித்தமே!

கொல்லை வழி நல்ல வழி

சிமையில் நடக்கும் கூட்டுக் கமிட்டிக்கு சக்லாம்பரநரம் குட்டியாகி விட்டது. லாகூரினின்று ஸர்தார் பூடா சிங் என்பார் சிமைக் கமிட்டிக்கு யாத்திரையாகப் புறப்பட்டார். அவருக்காக யாரோ சிலர் விருந்தொன்று வைத்தார்கள். விருந்து தினத்தில் பூடா சிங்கும் அவரது உறவினர்களும் வந்திருந்தார்களே யன்றி வேறு மனிதர் எவரும் தோன்றவில்லை. ஐயோ பாவம்! சமைத்திருந்த அத்தனையையும் வைத்துக்கொண்டு பூடா சிங் தின்றார் போலும்! மறுநாள் ஊரில் சீக்கியர்களின் பொதுக் கூட்டமொன்று நடந்தது. குலத்தைக் கெடுக்க வந்த கோடாரி போன்ற இந்த பூடாசிங்கைச் சீக்கியர் அவமானப்படுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. பூடாசிங் சிமைக்குப் புறப்பட்ட தினத்தில் அவர் வீட்டு வாசலிலும், வீதிகளிலும் சுமார் 2000 கறுப்புக் கொடி தாங்கிய சீக்கியத் தொண்டர்கள் நின்று கொண்டிருந்தனர். ஆகவே பாவம், பூடா சிங் கொல்லை வழியாக விழுந்தடித்துக் கொண்டு ஊரை விட்டு ஓடினாராம். ஜனங்கள் தெருத் தெருவாகத் தேடியும் ஆள் கிடைக்க வில்லையாம். இப்படியும் மானங் கெட்டு ஏன் கூட்டுக் கமிட்டிக்குப் போக வேண்டும்?

தடித்த துணி போதாதா?

சுதந்திரமில்லாது அலையும் இந்தியனுக்கு ஷோக்கு வேறு வேண்டுமா? ஏதோ மானத்தை மூட துணி கட்டிக் கொண்டால் போதாதா? 'நைஸாக'த் துணி கட்டிக் கொள்கின்ற வழக்கம் நம் நாட்டில் இனி இருப்பதற்கில்லை. ஏனெனில் மெல்லியத் துணி வேணுமானால் அந்நிய நாட்டினின்று நாம் பஞ்சு வரவழைக்க வேண்டும். நம் நாட்டிலேயே விளையும் பஞ்சினால் சாதாரணமான துணிகளைத்தான் தயாரிக்க முடியும். இத்தனை நாள் இந்தியப் பஞ்சை ஜப்பான் நாடு வாங்கிக் கொண்டிருந்தது. இந்தியப் பருத்தியைப் பகிஷ்கரிப்பதென்று ஜப்பான் தற்போது முடிவு செய்து விட்டதாம். ஆகவே இந்தியப் பருத்தியை இனி இந்தியர்களே உபயோகித்தாக வேண்டும். நம் ஜாதியினர் தடித்த துணி கட்டிக்கொள்ளாத் துணிந்தே தீரவேண்டும். இல்லாவிடில் பருத்தித் தோட்டங்களை யெல்லாம் அழித்துவிட்டு நம்மில் அநேகர் பட்டினி கிடந்து சாகவேண்டும். எது உசிதம்?

சட்ட மறுப்பு இயக்கம்

காந்தியடிகளின் சபர்மதி ஆச்ரமத்தில் ஓர் வீட்டில் 'நவஜீவன்' பத்திரிகையின் துண்டுப் பிரசுரங்கள் ஸைக்ளோஸ்டைல் மிஷினில் அச்சிடப்பட்டனாம். ஆகவே நரஹரி பரேக் என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் ஆசிரமத்திற் கடுத்த விதாஜி கிராமத்தை விட்டுப் போகக்கூடா தென்று தடை யுத்தரவு போடப்பட்டுளது. ஸ்ரீயுத பரேக் சமீபத்தில் தான் சிறையினின்று வெளி வந்தார்.

ஸபர்மதி ஸ்டேஷனருகே ரயில் வண்டியில் அபாயச் சங்கிலியை இழுத்ததற்காக ஒரு தொண்டர் கைது செய்யப்பட்டார்.

குண்டூரில் 4 பெண் தொண்டருக்கும் 3 ஆண் தொண்டருக்கும் தலா 6 மாதத் தண்டனை.

பம்பாயில் 4 பேருக்கு தலா 6 மாதம். கான்பூரில் ஒருவர் கைதியானர். மதுரை ஜில்லா குமாரம் கிராமத்தில் 10 தொண்டர் கைது செய்யப்பட்டார்கள்.

காந்தி படத்தைக் கண்டு பயம்

பஞ்சாபைச் சேர்ந்த ஷீக்புரா என்ற விடத்தில் மூன்று கடைக்காரர்கள் தங்கள் சுவர்களிலும், போர்டுகளிலும் மகாத்மா காந்தி, பகத் சிங், தத் ஆகியவர் படங்களை எழுதியிருந்தார்களாம். அவற்றை அகற்றுமாறு போலீஸ் சூப்பரின்டண்ட் உத்திரவு போட்டு விட்டாராம்.

இங்கிலாந்து பாங்கியின் தங்கம்

இங்கிலாந்து பாங்கி 44,68,121 பவுன் தங்கம் வாங்கி யிருக்கிறது. அந்த பாங்கி இப்பொழுது குவித்து வைத்திருக்கும் தங்க மதிப்பு 18,39,63,895 பவுன்களாகும். இந்திய ஜனங்களிட மிருந்த தங்கமோ 120 கோடி ரூபாய்க்கு மேல் கரைந்து போய் விட்டது.

அமெரிக்காவும் தங்க மதிப்பும்

இப்பொழுது அமெரிக்க ஐக்கிய சமஸ்தானமும் தன் நாணயத்துக்கு வைத்திருந்த தங்க மதிப்பைத் தற்காலிகமாகக் கைவிட்டு விட்டது. தங்க மதிப்பைக் கைவிட்ட மற்ற தேசங்களும் வழிக்கு வந்து தங்க மதிப்பைக் கொள்ளச் செய்ய வேண்டும் என்பதற்காகவே, இவ்வேற்பாடாம்.

உபவாசத்திற்கு ஒரு மாதம்

கள்ளிக் கோட்டைக்கருகில் கோதபரம்பாக் கோயிலெதிரே ஹரிஜனங்களுக்கும் கோயிலுரிமை வேண்டி உபவாசம் இருந்த டி. எஸ். பந்து என்பவருக்கு ஒரு மாதக் காவல் தண்டனை.

எண்ணெத் தகராறு

இங்கிலாந்துக்கும் பெர்ஷியாவுக்கும் ஏற்பட்ட எண்ணெத் தகராறு சம்பந்தமாக மறுபடியும் ராஜிப் பேச்சு வார்த்தைகள் மிக்க ரகசியமாக நடக்கின்றனவாம்.

கள்ளக்குறிச்சிக் கதர் ஆசிரமம்

கள்ளக்குறிச்சியில் ஓர் கதர் ஆசிரமம் இருக்கிறது. 1,700 நூற்போருக்கு அதனல் சாப்பாடு கிடைக்கிறது. 1932ம் வருடத்தில் 8789 ராத்தல் நூற்கப்பட்டிருக்கிறது. ரூ. 2593 சம்பளம் கொடுபட்டிருக்கிறது. 200 தறிகளும் இருக்கின்றன. 13,191 ராத்தல் நூல் நெசவாகி யிருக்கிறது. ரூ 4,975 தறிகாரருக்குச் சம்பளம் கொடுபட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் எஞ்சினீர்கள் தண்டனை

ருஷியாவில் விசாரணை செய்யப்பட்டு வந்த ஆறு பிரிட்டிஷ் கைதிகளுக்கும் தீர்ப்பளிக்கப் பட்டு விட்டது. மூவருக்கு தேச ப்ரஷ்ட தண்டனை. இருவருக்கு சிறை தண்டனை. ஒருவர் விடுதலை செய்யப்பட்டார். வழக்கில் சம்பந்தப்பட்ட ருஷியர்களுக்கு மட்டும் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன. என்றாலும் பிரிட்டிஷ் அரசாங்கம் இதில் கோபமடைந்து, ருஷிய சாமான்களுக்குத் தடை வரி விதிக்கும் சட்டத்தை அமுலுக்குக் கொணர ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.

கண்ணனூர் சிறை அவதி

கண்ணனூர் சிறையில் கைக் குழந்தையோடு உள்ள ஸ்திரீ கைதிகளுக்கு (ராஜிய கைதிகள்) பால் முதலிய வசதிகள் கொடுக்காததால் குழந்தைகள் மெலிந்து வருவதாக ஒரு செய்தி கிடைத்துளது.

மார்ச்சு மாத தண்டனைகள்

சென்னை மாகாணத்தில் சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமாக மார்ச்சு மாதத்தில் தண்டிக்கப்பட்டவர் தொகை 40.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.